No. 461.
T 4512



தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



தேனோலை - 29

1981-தூலை

மீனாட்சி பட்டயம்

தீர்த்தகிரி பட்டயம்

தேனோலை

இதழ் 29

1981 – ஜூலை

இரண்டு ரூபாய்

பதிப்பாசிரியர்

கொடுமுடி. சண்முகப் பிரகதம்

11-பி, இரண்டாவது அவின்யு,

இந்திராநகர், சென்னை-600020.

வணக்கம்

பேரன்புடையீர்,

தேனோலை தனது எட்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. முதலில் பட்டயங்களைத் தேடிக் கண்டுபிடித்து, ஆராய்ந்து வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தோம். பிற தொல்லியல் மற்றும் அறிவியல் கட்டுரைகளை வெளியிட கொங்கு திங்களிதழ் இருந்தது. இளம் ஆய்வாளர்களுக்கு ஒரு நல்ல வாகனமாகக் கொங்கு திகழ்ந்தது. அது போன்ற இதழ் ஒன்றினை மீண்டும் தொடங்கி நடத்துவது சற்று கடினமான வேலை, எனவே ஆய்வாளர்களின் புதிய கட்டுரைகளை தேனோலையிலேயே வெளியிட வேண்டுமென்று பலர் விரும்புகின்றனர். எனினும் இதுபற்றி உங்களுடைய கருத்துகளை எழுத வேண்டுகிறோம்.

தேனோலைக்கு ஆண்டுச் சந்தா வழங்கி வருவோர், எங்களின் நினைவூட்டுதல் இன்றியே தொடர்ந்து அனுப்பி வருவது எங்களை மேலும் ஊக்குவிக்கின்றது.

நூலகங்களின் வாயிலாகப் படித்துப் பயன்பெறும் நேயர்களும் தங்களின் கருத்துரைகளை வழங்கிட வேண்டுகிறேன். உங்களிடமோ, உங்களுக்குத் தெரிந்தவர்களிடமோ, ஏதேனும் எழுத்துள்ள செப்புப்பட்டயமோ, அதன் ஓலைப்பிரதிகளோ இருந்தால் தகவல் தந்து உதவிட வேண்டுகிறோம்.

வணக்கம்.

பதிப்பாசிரியர்.

காவேரிப் பட்டணம் பட்டயங்கள்

கண்டு பிடித்தவர்

சேலம் நகரத்தில் ஒரு அருங்காட்சியகம் உண்டு. முன்னாள் மாவட்ட ஆட்சியாளர் திரு சாமிநாதன் அவர்களின் ஆர்வத்தாலும் பெரு முயற்சியாலும் தோற்றுவிக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்பும், கலைச் சிறப்பும் கொண்ட அரிய சிற்பங்களும், கல்வெட்டுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. அதன் தொடக்ககாலக் காப்பாளர் புது பொ. வேங்கட்ராமன் என்பவர். தமிழாசிரியர். தனது வாழ் நாளெல்லாம் தொல்பழம் பொருட்கள் சேர்ப்பதில் செலவிட்டவர். பண்டைய அரிய நாணயங்கள் ஏராளமாகச் சேர்த்து வைத்துள் ளார். தற்போது கடத்தூரில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். அவர் கண்டுபிடித்த இரண்டு செப்புப் பட்டயங்கள் பற்றிய செய்தி களே தற்போது காண்கிறோம்.

இடம் :

இவ்விரண்டு பட்டயங்களையும் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த காவேரிப்பட்டணம் என்ற ஊரிலுள்ள குலால மக்களிடம் கண்டு பிடித்தார். அவற்றில் ஒரு பட்டயம் கி. பி. 137½இல் வேட் கோவருக்கு இடப்பட்டிருந்த வரிவிலக்கு பற்றியது, வரிவிலக்கு உள்ளதை அறியாமல், வரிவசூலிக்கும் அதிகாரிகள் மயிலாப்பூரி லிருந்து வந்து, வரி கேட்ட விவரமும், மீனாட்சி என்ற வேட்கோ குலப் பெண்ணின் வாக்குவாதமும் பற்றித் தெரிவிக்கின்றது. இதனை மீனாட்சி பட்டயயம் என்று அப்பெண்ணின் பெயரால் அழைப்பது பொருந்தும். இரண்டாவது பட்டயம் தீர்த்தகிரி மலை யில் இ. பி. 1485 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட குலாலர் மடம் பற்றிய தகவல் கூறுவது. இதனைத் தீர்த்தகிரிப் பட்டயம் என அழைப் போம்.

மீனாட்சி பட்டயம் :

29 செ.மீ. நீளமும் 42 செ.மீ. உயரமும் கொண்ட செப்புப் பட் டயத்தில் இரண்டு பக்கமும் எழுதப்பட்டுள்ளன. பட்டயத்தின்

மேற்பகுதி திருவாச்சி போல அமைந்துள்ளது. நடுவில் மேலே ஆறுதலை நாகம், சூரியனைக் குறிக்கும் பிறை. நடுவில் சிவலிங்கம் பட்டயத்தின் இடப்பக்கம், ஒரு காளை (ரிஷபம்), வலப்பக்கம் ஒரு அன்னப்பட்சி ஆகியவை புடைப்புச் சிற்பங்களாக வார்க்கப்பட்டுள்ளன. பட்டயத்தின் கீழ்ப்பகுதி இரண்டு கால்களோடு உள்ளன,

காலம் :

"சாயித்திய சாலிவான வருஷம் சகாத்தர் 4475க்கு மேல்" எனப்பட்டயம் தொடங்குகின்றது. இது கலியுகக் கணக்கில் சேர வேண்டும். கி.பி, 1374 எனறாகின்றது. இதில் குறிப்பிடும் அரச பரம்பரை விஜயநகர மன்னர் வரிசையாகும். ஸ்ரீ பிரபுடதேவ மகா ராயர் என்று குறிப்பிடப்படுகின்றது.

செய்தி :

மாடக்கல் என்ற ஊரில் சோலை செட்டி என்ற வேட்கோவர் குடியிருந்தார். அவருக்கு மீனாட்சி என்ற திருமணமாகாத ஒரு பெண் இருந்தாள்.

ஸ்ரீ பிரபுட தேவராயர் காலத்தில் வேட்கோவருக்கு, பொம்மை மற்றும் மட்பாண்டம் செய்வதற்கான தொழில்வரி செலுத்துவதி லிருந்து விலக்கு இருந்தது.

வரிவசூல் செய்யும் பணியைச் செய்தவர்கள் வீரமுட்டி என்ற இனத்தார். மயிலாப்பூரிலிருந்து ஊர்தோறும் சென்று வரிவசூல் செய்து வருவது வழக்கம். பொம்மை, மட்பாண்டம் செய்வதற்கு வரிவிலக்கு இருந்ததை அவர்கள் அறியவில்லை. வீட்டுக்கு இரண்டு பணம் வரி செலுத்த வேண்டும் என்றும், வரி வசூல் செய்ய வருவோருக்கு மூன்று வேளை விருந்தும் இடவேண்டும் என்ற மாமூல் வழக்கப்படி வசூல் செய்ய வந்தனர்.

மாடக்கல் சோலை செட்டி உள்ள தெருவில் வந்து வரியும் விருந்தும் கேட்டனர். வரி கொடுப்பதில்லை என்ற சோலை செட்டி யின் வாதத்தைக் கேட்கத் தயாராக இல்லை. வரி கொடாவிட் டால் 'ரணபாவாடம்' செய்வோம் என்றனர். வரி கொடாதவர் வீட்டின் கதவின் முன்னே துணியை விரித்து வைத்துவிட்டு கத்தி யுடன் மல்லாக்க படுத்து காவல் புரிவது; யாரேனும் அந்தத் துணியை மித்துத் தாண்டிப் போனால் அவர்களை வெட்டுவது ஆகும். இது அக்காலத்தில் வரி வசூல் செய்யும் வழக்கம்.

அவ்வாறு சோலை செட்டி வீட்டின் முன்னரும் ரணபாவாடம் விரித்துப் படுத்துக்கொண்டு கத்தியுடன் காவல் புரிந்தனர். அப்போது அந்த வீட்டுப் பெண் மீனாட்சி ஆசையோடு வளர்த்த வெள்ளைச் சேவல் துணியை மிதித்துக்கொண்டு வீட்டிற்குள் வந்து கொண்டிருந்தது. கத்தியுடன் இருந்த வீரமுட்டி அதனை வெட்டவே, சேவல் இரண்டு துண்டாகியது.

மீனாட்சி வெகுண்டு "என்னை வெட்டாமல், என் கோழிச் சேவலை எப்படி வெட்டலாம்" எனக் கேட்கின்றாள். அதற்கு வீரமுட்டி, "நீ கொடுக்கின்ற வரிப்பணம் இரண்டு. அதில் ஒன்றை உன் சேவலுக்கு விலையாக வைத்துக்கொள்" என்று கூறுகிறார்.

மீனாட்சி இதனை ஒப்புக்கொள்ளாமல், 'ரணபாவாடம் போட்டு கோழியைக் கொன்றாயல்லவா? அதை உயிரோடு எழுப்பிக்கொடுத்தே ஆகவேண்டும் என்றாள். அவ்வாறு எழுப்பிக் கொடுத்தால் நீங்கள் கேட்கும் வரியும் கொடுத்து புதுவரியும் உண்டு பண்ணித் தருகிறோம்" என்றாள்.

ரணபாவாடம் போட்ட வீரமுட்டிகளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எதிர் ரணபாவாடம் போட்டுச் சேவலை எழுப்ப முயல்கின்றனர் முடியவில்லை. பாவாடம் தரையில் கெட்டியாகக் கிடக்கின்றது. வீரமுட்டிகள் மனது கலங்கி இருக்கின்றார்கள்.

மீனாட்சி மீண்டும் கேட்க, வீரமுட்டிகள் பதில் சொல்ல வாக்குவாதம் முற்றுகிறது. சேவலை எழுப்பிவிட்டால், வீரமுட்டிகளை ஆனைமேல் வைத்து ஊர்வலம் செய்வித்து வேட்காவரிடையே அதிக வரியும் ஏற்படுத்திக் கொடுப்பதாக மீனாட்சி பேசுகிறாள். வீரமுட்டிகளால் வெட்டுண்ட சேவலை எழுப்ப முடியாமல் போனால் "நான் எழுப்புகிறேன்" என்று மீனாட்சி கூறுகிறாள்.

"நீ பெண் பிள்ளை. கோழிச் சேவலை எழுப்பிவிட்டால் எங்களது வீரமல்லாரி; முதலான எல்லா விருதுகளையும் விட்டு, வேட்கோவருக்குண்டான வரியும் விட்டு, மூன்று வேளை விருந்தையும் விட்டு விடுகிறோம்" என்று ஒப்புகின்றனர்.

மீனாட்சியாகிய திருமணமாகாத இளம்பெண் திருநீலகண்டரையும், சிவகாமியம்மையும் அனுக்கிரகம் செய்யுமாறு வேண்டி, சாலிவாகன் வமிசத்திற்குப் பெருமை வரவேண்டுமென்று வணங்கிப் புலம்பித் தொழுது, வெட்டுண்ட சேவலின்மீது தீர்த்தம் தெளிக்க, அது தன் பழைய இளமைத் தோற்றத்துடன் உயிர்பெற்று எழுந்ததாம்.

இதனைக் கண்ணுற்ற வீரமுட்டிகள், தமது விருதுகளை வைத்துவிட்டு வேட்கோவருக்கு இனி வீரமுட்டிகள் வரி இல்லை என்று ஏற்றுக்கொண்டு பட்டயம் எழுதிக் கொடுக்கின்றனர். அதில் ஸ்ரீ பிரபுட தேவராயர் பாதமறிய, இராமலிங்கர் பாதமறிய, சஞ்சீவி ராயர் பாதமறிய இப்பட்டயத்தை எழுதிக் கொடுக்கின்றனர். ராத வீரமுட்டி, பத்திர வீரமுட்டி, லிங்கப்ப முட்டி இவர்கள் மூவருமே ஒப்பமிட்டவர்கள். பின்கண்டவர்கள் அதற்கு சாட்சிகளாக உள்ளனர்.

பெனுகொண்டைப் பட்டக்காரர் மல்லி செட்டி
கொளாம் சிம்மி செட்டி
ஒசூருப் பட்டக்கார கெத்தி செட்டி
கொங்கு தாராபுரம் சகிதமாக கெண்டிக்கோட்டை திம்மசெட்டி
ஆதிவேணி பட்டி செட்டி
மோதூருப் பட்டி செட்டி
முருவாசல் இராயப்ப செட்டி
முளுவாசல் ராயப்ப செட்டி
கங்கசமுத்திரம் மாதி செட்டி
ஒரு பாயி செட்டி
ராயதுற்கம் ஒண்ணப்ப செட்டி
ரத்னதுற்கம் ஒண்ணப்ப செட்டி
ரத்னகிரி பட்டி செட்டி
தேவபுர மதி செட்டி
மற்றுமுண்டாகிய கொங்கு தாராபுரம் உறவின் முறையார்.

வேட்கோவருக்கு சுங்கம், பொம்மை வரி இல்லை. மற்றும் பட்டணப்புலவர்கள், கூத்தாடி, தொம்பன் முதலான பிறதொழிலாளர்களுக்கும் வரியில்லை யென்று தீர்ப்பாகின்றது. வரிவட்டம் என்று வந்தவர்களுக்கு நவபாண்டம் மட்டும் கொடுப்பது என்று உறுதி செய்து கொள்ளப்படுகிறது.

நம்புகை :

இப்பட்டயத்தை எவ்வளவு தூரம் நம்பலாம்? எழுதப்பட்ட ஆண்டு கலியுகத்தில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டின் பெயர் இல்லை. ஆட்சியிலிருந்த விஜயநகர மன்னர் பிரபுட தேவ ராயன் என்றும் அழைப்பர். அவனது காலம் 1485 என்று கருதப் படுகிறது. காலக்கணக்கில் சுமார் நூறாண்டு வித்தியசம் உள்ளது.

பட்டயத்தில் வெட்டித் துண்டாக்கப்பட்ட சேவல் மீனாட்சியம் மையால் எழுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதை நம்ப முடிய வில்லை.

பட்டயம் குலாலர் புகழ்பாடும் செய்தியாக உள்ளது. அடியில் கையொப்பமிட்ட சாட்சிகள் குலாலர்களாகத் தெரிகின்றனர்.

எனினும் இப்பட்டயத்திலிருந்து கொள்ளக்கூடிய செய்திகள் சில உண்டு.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் மண்பாண்டம் வனைவோ ருக்கும், பொம்மை செய்வோருக்கும், தொழில் வரியிலிருந்து விலக்கு இருந்ததை அறிகின்றோம். நாடு முழுவதும் சென்று வரிவசூலிக் கும் பொறுப்பினை மயிலாப்பூரில் இருந்த வீரமுட்டிகள் என்போர் பெற்றிருந்தனர். வரி வசூலிக்கச் செல்லுமிடங்களில், வரிப்பணம் கொடுப்பதோடு, அவர்களுக்கு ஒரு நாள் உணவு படைக்கவும் வேண்டும். வரி வசூலில் சற்று கடுமை இருந்ததை அறிகின்றோம். வீட்டின் பாவாடம் விரித்து, கத்தியுடன் காவலிருந்து, வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் யாரும் செல்ல முடியாமல் தடுப்பதன் மூலம், வற்புறுத்தல் செய்யும் வழக்கம் இருந்தது. ஒரு சமுதாயப் பழக்கத்தைப் இப்பட்டயத்தின் மூலம் அறிகின்றோம்.

வீரமுஷ்ட்கள் என்போர் விஜயமன்னர்கள் காலத்தில் அரசாங் கத்தின் பணியில் இருந்தவர்கள் என்பதை தேனோலை பதினோராம் இதழில் (சனவரி 1977) வெளியான மயிலாப்பூர் பட்டயத்தாலும் அறியலாம். நகரத்தார் என்ற சொல்லை, மயிலாப்பூரில் ஒரு தண் ணீர் பந்தலில், கொமுட்டிகள் பயன்படுத்தியதை, ஆரிய வைசிரியர் வன்மையாக எதிர்க்கின்றனர். இவர்களினிடையே சமாதானத் திற்கு வீரமுட்டிகள் வருகின்றனர். மன்னரிடம் தூதுசென்று பழைய பட்டயங்களில் உள்ளபடி தீர்த்துக் கொள்ளுகின்றனர். அப்பட்டயத்தை முழுதும் படித்து மேல் விவரம் அறிக.

வேட்கோவர் :

குயவர், வேட்கோவர், குலாலர், உடையார், மண்ணுடையார், பத்தர், பிள்ளை என்று பலவாறாக அழைக்கப்படும் மக்கள் மண் பாண்டம் வனைவோர் ஆவர். மற்றும், மண் பொம்மைகள், கூரை ஓடுகள் முதலியன செய்வதில் வல்லோர்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்

என்றபடி 63 நாயன்மார்களில் தலையாயவரான திருநீலகண்டர் இக்குடியினராவர். குயவர் என்ற சொல்லைத் தாழ்வாகக் கருதி, திருநீலகண்டர் என்ற பதத்தையே பயன்படுத்துவர். சாலிவாகனன் என்ற பெருமன்னன் இக்குடியைச் சேர்ந்தவன் என்ற கருத்தும் உலவி வருகின்றது: அதனால் சாலிவாகன வமிசம் என்று அழைப்பதும் உண்டு.

தேனோலையில் வெளிவந்துள்ள மதுக்கரைபட்டயம், யிருபத்தி நாலு நாட்டுப் பட்டயம், அரைய நாட்டார் பட்டயம், சென்மப் புலவன் பட்டயம் ஆகியவை வேட்கோவர் பற்றிய செய்திகளாகக் கூறுவனவாகும்.

மதுக்கரைப் பட்டயம் :

தேனோலையின் முதல் இதழில் மதுக்கரைப் பட்டயம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பட்டயம் வெளியாயிற்று. அந்த ஓலைச் சுவடியில் ஆண்டுக்கணக்கு சரியாக இல்லை. இதே பட்டயம் சுமார் 90 ஆண்டுகட்கு முன்பு பழனியில் அச்சிடப்பட்டுள்ளது.

கலியுக சகாற்புதம் 4215
சாலிவாகக் சகாற்புதம் 1036

ஆக இவை யிரண்டும் கி. பி. 1114ஆம் ஆண்டையே சுட்டுகின்றன அது விசய வருடம் ஆகும். எனவே மதுக்கரைப் பட்டயத்தின் தேதி எல்லா வகையிலும் உறுதிப்பட்டுள்ளது, பழைய தேனோலை படித்த வரலாற்றாய்வாளர்கள், தத்தம் பிரதிகளில் இத்திருத்தத்தைச் செய்து கொள்க.

தீர்த்தகிரிப் பட்டயம் :

இரண்டாவது பட்டயம் தீர்த்தகிரி மலையில் வற்புறுத்தப்பட்ட பொது மடம் ஒன்றைப் பற்றியது இதுவும் குலாலர்கள் எனப்படும் வேட்கோவர்கள் ஏற்படுத்திக்கொண்ட ஒன்று.

கலியுகம் 4590 இல் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. விசுவாவசு வருடம் என்று கூறப்படுகிறது; 4586 ஆக இருந்திருக்க வேண்டும். கி.பி. 1485 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சி. ஆவணி மாதம் எட்டாந்தேதி செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. விஜயநகர மன்னர்களில் சீரங்கராயன் ஆட்சிக்காலம்.

திருநீலகண்டர் என்ற சொல் வேட்கோவரை இங்கு சுட்டு கிறது. இவர்கள் தங்களைப் பற்றிக் கூறிக்கொள்ளும்போது "ஆறு பட்டம் அம்பத்தாறு தேசம், மூனு பட்டம் 24 நாடு, எட்டூர்" என்று சொல்லிக் கொள்வார்கள். அம்பத்தாறு தேசம் என்பது அக்கால பாரத நாட்டின் "அங்கம், வங்கம், கலிங்கம்.........." முதலானவையாகும் இருபத்திநாலு நாடு என்பது கொங்கு 24 நாட்டைக் குறிக்கும். மதுக்கரைப் பட்டயத்தின்படி, கொங்குநாட்டு மக்கள் 1114 ஆம் ஆண்டு சோழ நாட்டிலிருந்து 32 வேட்கோக் குடும்பங்களை அழைத்து வருகின்றனர். நாட்டுக்கு ஒன்று வீதம் 24 நாட்டில் குடியமர்த்தியது போக மீதியுள்ள எட்டுக் குடும்பங்களையும் எட்டு பெரிய ஊர்களில் குடியமர்த்தினர் அதனால் "கொங்கு 24 நாடும் எட்டூரும்" என்ற வழக்கம் அவர்களிடையே வழங்கி வருகிறது. இப்பட்டயத்தில் "அம்பத்தாறு தேசத் திருநீலகண்டரும் கூடி ஏற்படுத்திய மட தர்மம்" என்று மட்டும் கூறப்படுகிறது.

இதன் நடைமுறைச் செலவுகளுக்கு வீட்டுந்து ஒரு பணம் வீதம் கொடுக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. 'சாதி மகமை அவதாரம்' என்பது அந்தந்த நாட்டுக் கூட்டத்தில், சமுதாயத் தவறு செய்வோரிடமிருந்து வசூல் செய்யும் அபராதத் தொகை ஆகும்.

தீர்த்தகிரி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒரு மலைத்தலம் ஆகும். கோயிலும் தீர்த்தமும் சிறப்புடையவை.

(முடிவுரை : இவ்விரண்டு பட்டயங்களும் அக்காலப் பேச்சு வழக்கப்படி அமைந்துள்ளன, பிழைகளும் மலிந்துள்ளன. சொன்னதைத் திரும்பச் சொல்வளம், முன்னுக்குப் பின்னாகச் சொல்வதும் உள்ளன. உரைநடையை ஆராய்வோருக்கு உபயோகமான பட்டயங்கள் ஆகும்.

இனிப் பட்டயங்கள் அசல் வாசகம் காண்போம்.

தீர்த்தகிரிப் பட்டயம்

ஸ்ரீமன் மகாமேரு பறுவத கயிலாரயிம் கேதார காசி ஸ்ரீசயிலம் காஞ்சி யிது முதலான தூற்றெட்டுத் தலமுமான தீர்த்தகிரி மகத்துமம், வதிட்டர், வால்மீகர், அகத்தியர், பார்வதி, சுப்பிரமணியர், ராமபத்திரர், தேவேந்திரன், அக்கினி, பகவான், யெமன், வருணன், அனுமந்து, யிவர்களுக்கு முத்தி குடுத்த ஸ்தலம் தீர்த்தாசலம் கருது, பஞ்ச பூதகிரி சிவசயிலநாதற் கருது, சிதிநுநதாகூடம், விரவு புனல் கமலம், சேமசித்தினிவாசம், நிசந்தீர்மேல் வியாதிஞசம், துரித்தாந்த பரராம செந்பதாம், ராமேட்டம் சுவாமி சிங்கம் மருவு மிந்த பதி முணு பேருமந்த மலைத்திமையோர் வகுத்தவாறே

யிப்பவும் விசேஷ தலத்தில் பூறுவம் ஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரிராய விபாடன், பாஷைக்குத் தப்புவராய கண்டன், கண்டனுடு கொண்டு கொண்டனுடு கொடாதான், துலுக்கர் தள விபாடன், துலுக்கர் மோகந் தவிழ்த்தான், ஒட்டியார் துலுக்கரை ஓட வென்றவன், அஷ்ட்ட திசி முட்ட வாழு மன்னவன், ரெட்டம் பதினெட்டும் கொண்ட கிறுபாகரன், விடமடம் பட்டண மாய வியாகம் செய்தவன், யீழந்திறை கொண்ட வீர ராசக்கள் தம்பிரான், வேளந் தனக் குதையன், மெச்சு பரி நகுலன், தவநேயுள்ளவன், சத்தியவாசகன், சிவநெறி தழைக்க திருநீறிட்டவன், மனயா வேட்டையாடு மணவாளன், யினிலந்தன்னில் லெண்ணும் புகழ்கொண்டவன் பகை(த்)தவர் வேங்கை, மிகைத்ததர் சிங்கம், கரி படை தாங்கும் தான விஞோதன், பொருபடை தாங்கும் போரினில் வீரன், குருலிங்க சங்கம மென்கின்ற மூன்று தன்ம லுண்மை யறிந்தவன், யிராசாதி ராச ராச பரமேசுவரன், ராசமார்த்தாண்டன், ராசகேசரி, ராசபுசங்கன், ராச வல்லவன், ராச தேவடாசல ராச கோலாகலன், ராசகம்பீர பிறதாபன், அசுபதி, கெசபதி, நரபதி, நவகோடி நாறாயனன், மதியாத மன்னர்தம் மகுடஞ்சிதற பரசூரை கைகொள்ளும் பரிமேல் நகுலன், கரி மேலு தையன், ஒரு குடைக் கீளுலக முழுதாண்(டு) லாரிலொன்று கடமை கொண்டு அல்லவை கடிந்து நல்லவை நாடி மந்திரகிரி பறுவத மெல்லையாகவும் லெஷ்ண திக்கும் பொதிய மாமலை யெல்லையாகவும்,

பூறுவம் மல்லிகாற்சுனராயர், விருப்பாக்ஷிராயர், பிறபுட தேவ மகாராயர், வீர வசந்தராயர், அச்சுதராயர், கிஷ்ணராயர், ராமதேவ

ராயர், பிறபுடராயர் சகோதரமான வீர வசந்தராயர், சதாசிவராயர், ராமராயர், எறிதிம்மராயர், வெங்கடபதிராயர், சீரங்கராயர் யிவர் களுக்குச் செல்லாநின்ற

கலியுக சகார்த்தம் ஞலாயிரத்து அஞ்ஞூற்று தொண்ணூராண்டுக்கு மேல் செல்லா நின்ற விசுவாவசு வருஷம் ஆவணி மீ 8 உ செவ்வாய்க்கிழமை ஞள் விசேஷமன் தீற்த(கி)ரி யீசுரர் சன்னதியில் திரு (நீ)லகண்டர் மடதற்மம்.

யுள் ஞடு செகதேவராயர் சீர்மை முதல் அன்பத்தாறு தேசத்து திருநீலகண்டரும் மடதற்மமுண்டு பண்ணி ராமலிங்க பண்டாரத்தையும் பிறதஷ்டை பண்ணி மடத்துக்கு வற்த்தனை ஆனை பூறுவமாக ஏற்பிறிச்ச விவரம்.

வீட்டுக்கு ஒரு பணமும், சாதி மகமை அவராதமும் குடுத்து நடப்பிச்சு வரவும்.

இத்தற்மத்தை பரிபாலம் பண்ணின பேர்கள், ரிஷிகள் பெற்ற பேறும் தேவர் சுப்பிரமணியர் பெற்ற பேறும், மாற்க்கண்டனுக்கு யுண்டான ஆயிசுதும் யுண்டாகவும். தீற்தகிரியீசுவரர் வடிவம்மை துணை.

யிந்த தற்மத்தை யாதாமொருவர் அகிதம் பண்ணின பேர் கெங்கைக் கரையிலே (க)ராம் பசுவை கொன்ற பாவமும், அசுவத்து, பிறமத்தி, கோவத்தி(சி)சுவத்தி பண்ணின பாவத்திலே போக கடவே(ர)ராகவும்.

யிந்த தற்மத்தை பரிபால(ன)ம் பண்ணின நீடூழி காலம் வாழவும், ஆறுமுக துணை.

குடுத்தவன் சாதிக்குள்ளுக் குடாதவன் சாதிக்குப் பிறம்பு.

மீனாட்சி பட்டயம்

சிவமயம் உ

சாயித்திய சாலிவாகனஙூ சகாதா 4475 மேல்

ஸ்ரீ வீரபிறதாபர், வீரப்பிறதாபமகாதேவருயர், உத்திர தெக்ஷ்ணம் சதிரம் ஞலு சமுத்திரம் அன்பத்தாறு தேசமும் இருபத்து ஞலு நாடும் கொங்கு தாராபுர முதலாகிய சாலி வ(ா)கனர் திருநீலகண்ட வற்கம்,

கிறதோ, திறேதா, துவாபரா, கலியுகம் ஆக ஞலு யுகத்திலும் ராச்சிய பாரம் பண்ணும் சாலிவாகன வற்கம் யிவர்களிட பிறுதாங்ளி எக்கியத்துக்குள்ப் பட்டவர், முப்புரி நூலுந் தெற்பையு முள்ளளவர், வீமனைப் பணிகொண்டவர், தொண்டுக்குத் தொழிளிலது குடாதவர், ஆவுடையப்பர் சம்மந்தவர், திலலையம் பலத்தில் எளமை பெற்றவர், அறுபத்தி மூவர் சமூகத்திலிருப்பவர், அன்புடன் (ந)வ பாண்டம் விளங்குவார்,

கரிகாற்சோழனை வளர்த்த பரிபாலகர், இப்படி ஞலு சமுத்திர அன்பத்தாறு தேசமும் இருவத்து ஞலு ஞட்டிலும் ராச்சியபாரம் பண்ணுமரசர்ருகளுக்கு சொன்ன யூழியம் நவபாண்டம் விளங்கி கொண்டு சாலிவாகன வற்க திருநீலகண்டர் ராசாக்களண்டே யிருக்குற வேளையில் ராசாக்கள் சாலிவாகன வற்கத்தார் ஞாலு சமுத்திரமும் அன்பத்தாறு தேசமும் யிருவத்து நாலு நாடு மட்டிலும்,

அரமனை வரிவட்டம், சுங்கம் பேரம்மு மனவரி, புகவரி, பட்டன், புலவர் கூத்தாடி சாலிவாகனர் வங்கிஷத்தில் வீரப்பிறபிட மகாதேவராயர் வேளயில் சாலிவாகன ஙெங்கிஷத்தாருக்கு யிந்த வரிகளை வேண்டா மென்று கட்டு பண்ணியிருக்றிற ஞளையிலே

மயிலாபுரி பட்டணத்திலிருந்து சாலிவாகன வங்கிஷத்து வீரமுட்டிகள் சாலிவாகனத்தார் வீட்டுக்கு ரண்டு பணமும் மூணு னேரத்து விருந்து உண்டு என்று கெண்டிக் கோட்டையில் திம்மி செட்டி, மல்லிசெட்டி, வீரிசெட்டி, ரங்கிசெட்டி, வீரிசெட்டி, ரங்கிசெட்டி, பங்காருசெட்டி திருமலை, பொக்கிஷம் ஆதிசெட்டி, உக்கிருணம் ஆ(க)விப்படி மாடக்கல் சோலை செட்டி வளவில்

வீரமுஷ்டிகள் மயிலாப்புரி பட்டணத்திலிருந்து வந்து சோலை செட்டி வாசல் முன்னே

'வரி நீ குடு' யெண்ணு வீட்டுக்கு ரண்டு பணமும் மூணு நேரத்து விருந்தும் சோலை செட்டியை வீரமுஷ்டிகள்

டவண்டை, மல்லாரி, வெள்ளைப்பூச்சக்கிற(க்)கொடை, கண்டை, சேகண்ட முழங்க யிப்படி யிருக்குர னாளில்

சோலைசெட்டி(க்)காரன் வரி குடுக்கர தில்லை யெண்ணுன்.

நீ குடாமல் போனுல் ஞனுன்னுடைய வாசல்லே ரணபாவாடம் பண்ணுவேன்னென்னு

சோலைசெட்டி வாசலிலே ஒரு வீரமுஷ்(டி)யை வாசப்படி மேலே அவனை(ப்)படுக்கவைச்சு ரணபாவடம் பண்ணுவேநென்று ஆயிதபாணமெடுத்து வயித்து மேலே வைச்சுக் கொண்டிருக்கர வேளையிலே

சோலைசெட்டி மகளொருத்தி கல்யாணமாகாத பொண்ணு வீட்டில் வீரமுட்டிகள் வாசப்படியிலே யிப்படிப் போருடிக் கொண்டு யிருக்கும்போது சோலைசெட்டி வாசல்க் கோளி

வெள்ளைக்கோழி(ச்)சாவல் மேஞ்சி கொண்டு வீட்டுக்குப்போக வேனுமெண்ணு போகையிலே

வீரமுட்டியாகிரவன் தன்னுடைய ஆயுதத்தாலே எட்டி கோளிச்சாவலை வீசினுன் அந்தச்சாவல் இரு துண்டமாகப் போச்சுது.

அதின் பிறகு சோலை செட்டி மகள் மீனுட்சிய(ம்)மாளாகுரவள் 'அடா வீரமுஷ்ட்டி என்னை வெட்டமாட்டாமல் என்னுடைய கோளி சாவலை வெட்டினியே' யென்று மீனுட்சி அம்மாள் கேள்க்குரபோது

'நீ குடுக்குர வரிப்பணம் ரண்டு உண்டு. அதில் ஒரு பணம் சாட்டிக்கோ' வென்று வீரமுஷ்ட்டி ஆகுரவன் சொன்னுள்.

அதின்பின்பு என்னுடைய சாவலையும் உன்னுடைய கையினுலே கொன்று விலை வாங்கிக்கோ வென்று சொன்னுயே, வீரமுஷ்ட்டி, ஆனுல் என்னுடைய சாவலை பாவாடம் போட்டாயே, அந்தப் பாவாடத்தை நீங்கள் எழுப்பினே ஆனுல் உங்க

ளுடைய வரியுங்குடுத்து அதிக வரி யுண்டு பண்ணித் தாரோ ' மென்று மீனுட்சி அம்மாள் ஆக்கரிச்சுக் கேள்க்கும் போது

வீரமுஷ்ட்டிகள் 'ஸ்ரீ பிரவிடை தேவ ருயறு பாதமரியதக்கி தாக வீரமுஷ்ட்டிகள் கோளி பாவாடத்துக்கு வீரமுஷ்ட்டிகள் ரண்டு பாவாவம் எதுப்வாவாடம் போட்டு ஆக்கிரச்சு எளுப்பும் போது பாவாடம் பூமியைக் கடிச்சுக் கொண்டு பாவாடம் எளுப் புறத்துக்கு இல்லாமல் எ(ப்ப)டி யெ(ன்)று வீரமுஷ்ட்டிகள் மனரு கலங்கி நிற்கும் போதில்

மீனுட்சியம்மனும் யாகுரவள் 'அகோ வீரமுஷ்ட்டிகளே பாவாடம் எளுப்புறதுக்கு யில்லே' யென்று கேள்க்கும்போது 'பாவாடம் திரிம்பியும் வீரமுஷ்ட்டிகள் பாவாடம் எளுப்புரு' மென்று பாசை பந்தயங்கள் கூரி 'ஸ்ரீ பிரபட தேவருயர் பாதமரிய'

மீனுட்சியம்மனுக்கும் வீரமுஷ்ட்டிக்கும் பாசை பந்தயங்களாகி 'வீரமுஷ்ட்டி எளுப்புன தேயானுல் வரியும் குடுத்து அதிகவரி யுண்டு பண்ணி, ஆணைமேல் மிரவணை ப(ண்)ணி சாலிவாகன வங்கிசத்தில் அதிகவரி யுண்டு பண்ணித் தாரோ' மென்று மீனுட்சியம்மாளாகுரவள் சொல்ல

வீரமுஷ்ட்டி எளுப்ப மாட்டாமல் போனபடியினுலே

மீனுட்சியம்மன் 'ஞன் யெளுப்புறேனெ'ன்று கேளுக்கும்போது',

'நீ பெண்பிள்ளை எளுப்பின தேயானுல் என்னுட பிருதுமு மல்லரி அப்படிய் கொத்த எச்சான பி(று)துகள் எல்லாங் குடுத்து சாலிவாகன வங்கிசத்துக்கு வீரமுஷ்ட்டி வரியு விட்டு மூனு கேரத்து விறுந்து எளந்து போக கடவே ருகவும்' என்று

வீரமுஷ்ட்டிகள் மீனுட்சியம்மனும் பாசை பந்தையங்கள் கூரி மீனுட்சியம்மன் ஆக்கரிச்சி

'திருநீலகண்டர் பாதமரிய, சிவகாமி அம்மன் அனுக்கிரக வுண்டாகவும் சாலிவாகன வங்கிஷத்துக்கு கீர்தி யுண்டா(க்)கவும் யென்று புலப்பி மீனுட்சியம்மன் ஆக்கரிச்சு தீர்த்தம், பாவாடத்தின் மேல் தீர்ந்தந் தெளிக்க

எவ்வறன சுரூபமாக எழுந்திருந்தபடியினுலே

வீரமுஷ்ட்டிகள் தங்களுடைய விருது முஷ்டிகளெல்லாம் குடுத்து, 'சாலிவாகனன் வங்கிஷத்துக்கு வீரமுஷ்ட்டிகளென

நாலு சமுத்திர அன்பத்தாறு தேசமும் யிருவத்திஞலு ஞட்டுக்கும் வீரமுஷ்ட்டிகள் வரியில்லை'யென்று

வீரமுஷ்ட்டிகள் தாங்களாக சாலிவாகன வங்கிஷத்தாருக்கு ராதவீரமுஷ்ட்டி, பத்திரவீரமுஷ்ட்டி, லிங்கப்பமுஷ்ட்டி இவர்கள் மூணு பேரும் இனிமேல் சாலிவாகன வங்கிஷத்தாருக்கு வீரமுஷ்ட்டிகளுக்கு வரிவட்டி வேண்டாமென்று

தாங்கள் தானே ஸ்ரீ பிறவிட தேவருயர் பாதமரிய, ராமலிங்க சாமி பாதமரிய, சஞ்சீவிராயர் பாதமரிய வீரமுட்டிகள் எழுதி சாலிவாகன வங்கிஷத்தாருக்கு கோடி காலம் வரிவட்டி இல்லை யென்று எழுதிக் குடுத்த பட்டையம்

யிதுக்கு சாஷ்சி பெனு கொண்டை பட்டாக்கார மல்லி செட்டி, கொளாம் திம்மி செட்டி, ஓசூரு பட்டக்கார கெத்தி செட்டி, கொங்கு தாராபுரம் சகிதமாக கொண்டிக்கோட்டை திம்மி செட்டி, ஆதி வேணி பயி செட்டி, மோதூரு பயி செட்டி, முருவாசல் இராயப்ப செட்டி, முளுவாசல் ராயப்ப செட்டி, ருயதுற்கம் ஒன்னப்ப செட்டி, ரத்னகிரி பயி செட்டி, தேவபுர மதி செட்டி, மத்து முண்டாகிய கொங்கு'தாராபுரம் உறவின் முறையார் சயிதமாக வீரமுட்டிகளுக்கு நாலு சமுத்திரம் அன்பத்தாறு தேசத்திலும் யிருவத்து ஞலு ஞட்டிலும் வீரமுட்டிகளுக்கு வரிவட்டி யில்லை யென்று

ராயர் சமூகமறிய, சாலிவாகன வங்கிஷத்தாருக்கு சுங்கம் பொம்மு வரிவட்டி பட்டண புலவர்கள், கூத்தாடி தொம்பன் யிவர்கள் முதலாகிய வற்தனைக் காரருக்கும் வரியில்லை யென்று தீர்த்தபடி.

யாதாமொருவன் நம்ம சாதியில் வரிவட்டமென்று வந்தவர்வர்களுக்கு நவபாண்டம் விளங்கி குடுக்கத்தக்கதாகும்.

யிப்படி பூமி யாகச மரிய சந்திர சூரியர் ரீதீத்தபடி யிதிலே யிப்படி யாதாமொருவன் வரிவட்டங் குடுத்ததே யானல் சாதிக்கு ஆகாமல் நிந்தி(ச்)சுப் போகக் கடவே(ா)ஞகவும்

யிந்தப் பட்டத்தை யாதாமொருவன் நிந்திச்சவன் காசியிலே க(ா)ராம் பசுவை கொன்ற பாவத்திலே போகக் கடவே(ா)ஞகவும்.

திருநீலகண்ட சுவாமியாா லஷ்சிக்கவும், அம்மன் லஷ்சிக்கவும், சிவமயம், குருகடாஷ்சம் வுண்டாகவும், ஸ்ரீஸ்ரீ உ.

△▽△

பண்டை நகரமைப்பு
பண்டைக் கட்டிடக் கலை

△∧

சென்ற இதழில் (30) பண்டை நகரமைப்பு என்ற தலைப்பில் ஒரு முழுக்கட்டுரை வெளியாயிற்று. அதனைத் தொடர்ந்து பண்டைக் கட்டிடக் கலைப் பகுதியும் வந்தது. அதன் தொடர்ச்சி அடுத்த பக்கம்—பக்கம் 33.

இதில் கூறப்பட்டவை பெரும்பாலும் சங்க காலத்துச் செய்திகள். சங்க இலக்கியங்களில் கண்ட குறிப்புகளின் துணை கொண்டு தொகுக்கப்பட்டவை. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்க காலத்தின் இறுதிக் காலகட்டத்தைச் சேர்ந்தவை. பெருங்கதை கி. பி. அய்ந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதில் விரிவாகக் கூறப்பட்டவை அனைத்தும் கட்டிடக் கலையைப் பொருத்தவரை சங்க இலக்கியங்களில் குறிப்பாகச் சுட்டிச் சொல்லப்படுபவைகளின் விரிவு எனக்கொள்ளல் பொருந்தும். மேலும் பெருங்கதை நகரங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை அல்ல. ஆனால் புலவர் கொங்கு வேள் பச்சைத் தமிழர். தான் கண்டு கேட்டவைகளையே நமக்குப் படைத்தளித்துள்ளார் எனக் கொள்ளுதல் மிகவும் பொருந்தும். இனித் தொடர்க.

No. 461.



For Quality Retreading of
all Sizes of Tyres from
SCOOTERS TO TRACTOR
in our plant by highly skilled persons
Please Contact

THE ANAMALAIS
RETREADING COMPANY

ARC

225, Dr. Nanjappa Road,
COIMBATORE - 641018
PHONE : 34500
TIRUNELVELI - 627002
PHONE : 2590

ARC Symbol of SERVICE! SAFETY!! SAVINGS!!!

ஆசிரியர், வெளியிடுபவர்: கொடுமுடி சண்முகப் பிரகதம்.
11-அ, 2ஆம் பெருஞ்சாலை, இந்திரா நகர். சென்னை-600020.
அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.